# களனி பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

களனி பல்கலைக்கழகத்தினால் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தகுதி பெற்றவர்களிடம் இருந்து 2026 ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

## 01. பதவி: தொழில்நுட்ப அதிகாரி (தரம் II) "B" பிரிவு

**சம்பள முறை**: UMT 1 (III) ரூபா 51,095 – 7 x 540 ; 10 x 640 – 60,575 ( 2027.01.01 ஆம் திகதிக்கு) (ஏனைய கொடுப்பனவுகள் உட்பட ஆரம்பத்தில் மாதாந்த மொத்தச் சம்பளம் தோராயமாக ரூபா 84,517/- ஆகும்)

**வயதெல்லை:** 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

## 02. பதவி: மருந்தாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

ரூபா 65,581/- (அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு உட்பட) வழங்கப்படுவதோடு, அது தவிர பல்கலைக்கழகத்தில் குறித்த ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைய மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையது.

**வயதெல்லை:** 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை**

மேலதிக விபரங்களைக் கொண்ட அறிவித்தல் மற்றும் விண்ணப்பப் படிவத்தை பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு (services.kln.ac.lk) பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2026 ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிறுவன கல்விசாரா பிரிவு, களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் முன்னர் மேல் குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் முழு விபரத்தைக் கொண்ட அறிவித்தலை நன்றாக வாசித்து விண்ணப்பிக்க வேண்டும் என அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

விண்ணப்பங்களை குறுகிய பட்டியலில் சேர்க்கும் உரிமை பல்கலைக்கழகம் வசமானது. பதவிகள் அனைத்தையும் அல்லது அதில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேல் அளவில் ஆட்சேர்ப்பது அல்லது சேர்க்காமல் இருக்கும் முடிவு பல்கலைக்கழக நிர்வாகக் குழு வசனமாதாகும். இது தொடர்பில் இறுதி முடிவு நிர்வாகக் குழுவின் முடிவாகும்.

நிரந்தர பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் தற்போது நிரந்தர சேவை ஒன்றில் ஈடுபட்டிருப்பதாயின் விண்ணப்பங்களை உயர் கல்வி நிறுவனம். அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளின் நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாத, தகைமைகள் தொடர்பில் சான்றிதழ் பிரதிகளை இணைக்காத, முழுமை பெறாத தெளிவற்ற மற்றும் குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது.

**பதில் பதிவாளர்**
**களனி பல்கலைக்கழகம்**
**2026.08.02**